"இனி எடுபடாது!"

மலர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (20-3-60) தனிப் பிரதி 16-காசு | இதழ் 36

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் டில்லி சர்க்காரும். அதற்குப் பக்கமேளம் வாசிக்கும் சென்னை சர்க்காரும், தாங்கள் அவ்விதம் கூறுவதில் சிறிதளவாவது உண்மையிருக்கிறதா என்று எண்ணிப்பார்ப்பதில்லை.

நமக்கு வடக்கென்றும், தெற்கென்றும் வேறுபாடு கிடையாது. இரண்டும் ஒன்றே! எங்கும் ஒரு கண்ணோட்டத்துடனேயே எதனையும் செய்கிறோம் என்று டில்லி சர்க்காரும்; வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்று இங்குள்ள எதிர்க்கட்சியினர் — குறிப்பாகத் தி. மு. க. வினர் கூறிவருகிறார்கள். இவர்கள் கூற்றில் சிறிதும் உண்மையோ, அக் கூற்றினை மெய்ப்பிக்கும் தன்மையோ இல்லை என்று சென்னை சர்க்காரும் அன்று தொட்டு இன்றுவரை— கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகவே கூறிவருவதை எல்லோரும் அறிவர்.

சர்க்காரையும் காங்கிரசையும் குறைகூறவே இவர்கள் ஒரு அமைப்பை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பேசிப் புளகாங்கிதம் அடைவதில் சென்னை அமைச்சர்களை யாரும் மிஞ்சிவிடமுடியாது. அந்த அளவுக்கு அவர்கள் திறமை பெற்றுள்ளார்கள். பொதுமேடைகளில் பேசும்போது, தாங்கள் அரசாங்கத்தை நடாத்திச் செல்லும் அமைச்சர்கள் என்பதையும் மறந்து, ஒரு சாதாரண கீழ்த்தரமான மேடைப் பிரசங்கி மாதிரி எதிர்க்கட்சிகளை நாவார நையாண்டி செய்து நகையொலி எழுப்புவதில் தனி இன்பம் காண்பதிலும் நமது அமைச்சர்கள் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளனர்.

வடக்கு வளர்கிறது, வாழ்கிறது; தெற்கு வளமிழந்து வாடுகிறது, வதைபடுகிறது என்று நாம் சொல்லும்போது நாடாள்வோருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடுகிறது. உடனே மூலைக்கொருவராகப் புறப்பட்டுப்போய் நம்மை நாவார வைது தள்ளிவிட்டு வந்துவிடுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம் சர்க்கார்மீது சாட்டும் குற்றங்கள் எல்லாம் பொய்யானவை, ஆதாரமற்றவை என்று உடனே பொதுமக்கள் ஒரு மனதாக நம்பிவிட்டார்கள் என்று மனப்பால் குடித்துக்கொண்டு வந்துவிடுகிறார்கள்.

ஆனால், பொதுமக்கள் இப்போது எந்த அளவுக்கு விழிப்படைந்து விட்டார்கள் என்பதை அறியும் வாய்ப்பை நமது அமைச்சர்கள் பெறவேண்டும் என்பதற்காகவே காங்கிரஸ் ஏடான "சுதேசமித்திரன்" சென்னை சர்க்காருக்கு ஒரு அறைகூவல் விடுத்திருக்கிறது.

"பொதுத் துறையில் தற்போது மூன்று உருக்குத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. **ஆனால் அம்மூன்றும் வட இந்தியாவிலேயே இருப்பவை.** நான்காவது தொழிற்சாலையைத் **தென்னிந்தியாவில்** ஏற்படுத்த வேண்டுமென லோக் சபையில் ஒரு தமிழ்நாட்டுப் பிரதிநிதி வலியுறுத்தியுள்ளார். இதற்குத் தேவையான வசதிகள் இங்கு இல்லை என்பது போன்ற சமாதானங்கள் **இனி எடுபடாது.** நெய்வேலியில் பழுப்புக் கரி ஏராளமாக வெட்டி எடுக்கலாம். இதே சமயத்தில் அதையொட்டிய சேலம் ஜில்லாவில் இரும்புக் கனிகள் பெருவாரியாக இருந்து வருகின்றன. அவற்றிலிருந்து சுமார் 50 கோடி டன் இரும்பு உற்பத்தி செய்யலாமென்று ஒரு மேற்கு ஜெர்மன் கம்பெனியைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் தற்போது குறிப்பிட்டுள்ளார். உண்மையில் அதைக்கொண்டு தயாரிக்கக்கூடிய தேனிரும்பின் தரம் உலகில் முதல் தரமானதாக மதிக்கப்படும் ஸ்வீடிஷ் இரும்புக்குச் சமமாயிருக்குமென்றும் அவர் கூறுகிறார்.

கனரகத் தொழில்களுக்கு முக்கியமாக இரும்பும், கரியும்தான் தேவை. இத்தகைய தொழில் துறையிலேயே தமிழ்நாடு விசேஷமாகப் பின்தங்கியிருக்கிறது. தற்போது சேலத்திலும், தென்னாற்காட்டிலும் உள்ள கனிவளங்களைக் கொண்டு, இக்குறையைத் துரிதமாகப் பரிகரிக்கக் கூடும்........."

இவ்விதம் 9—3—60-ல் ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது.

இதனைப் பார்த்த பின்னராவது, வறிதே எதிர்க்கட்சிகளைத் திட்டித் திருப்தி அடைவதை விட்டுத் தென்னகம் வளரவும் வாழவுமான திட்டங்களை ஏற்படுத்தச் செய்வதில் டில்லியை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

வடக்கின் ஓரவஞ்சனையால் தெற்கு எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்படுகிறது — பின் தள்ளப்படுகிறதென்பதை இனிமேலாவது நமது அமைச்சர்கள்— ஆளும் பொறுப்பில் இருப்பவர்கள் உணரவேண்டுமென்று விரும்புகிறோம்.

தென்னகத்தில் நல்ல பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தப் போதிய சாதனங்கள் இல்லை என்று கூறப்படும் **"சமாதானங்கள் இனி எடுபடாது"** என்று சுதேசமித்திரன் சுட்டிக்காட்டியிருப்பதை மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்துகிறோம். ❋

பாட்டாளி

—[கனகு]—

ஆலைச் சங்கு ஒலித்து அரை மணி நேரம் ஆகிவிட்டது. இப்போதுதான் அவன் வேலை செய்யும் அந்த அலுவலகத்துக் கடிகாரம் கண் விழித்துக்கொண்டது. "டாண், டாண்" என்று அவல ஒலி எழுப்பி எட்டுமணி என்று அறிவித்தது. இன்னும் ஒருமணி நேரம் அவன் அங்கே இருக்க வேண்டும். பரக்கப் பரக்க எழுத வேண்டும். அவன் எழுதினான். எழுதிக்கொண்டே இருந்தான். பகல் ஒரு மணிக்குக் கையில் எடுத்த பேனா. இன்னும் அதைக் கீழே போடவில்லை. கை மரத்துப் போய் அடிக்கடி பேனா நழுவிக் கொண்டிருந்தது. பேனாவைக் கீழே வைத்துவிட்டுக் கையை ஒரு முறை உதறிக்கொண்டான். உள்ளம் ஒரேயடியாக அயர்ந்துபோய் விட்டது. மூளை ஓய்ந்து கிடந்தது. அந்தச் சமயம் பார்த்துத்தானா முதலாளி உள்ளே நுழையவேண்டும்? திரும்பவும் பேனாவைக் கையில் எடுத்துக்கொண்டான். கணக்குப் புத்தகங்களைப் புரட்டினான். புரட்டிப் புரட்டி எழுதினான்.

முதலாளி எதிரிலிருந்த மெத்தைமீது அமர்ந்து, திண்டின்மீது சாய்ந்துகொண்டிருந்தார். அவனைப் பார்த்துக்கொண்டே இருந்தார். அவருக்கென்ன! பகல் ஒரு மணியிலிருந்து நான்கு மணிவரை நன்றாக உறக்கம் போட்டுவிட்டு எழுந்தார். நான்கு முறை வெறும் காபி அருந்தியுள்ளார். ஒருமுறை பலகாரம் சாப்பிட்டுவிட்டு, இப்போது அறுசுவை உண்டியையும் முடித்துக்கொண்டு தாம்பூலம் தரித்தபடி வந்து உட்கார்ந்து கொண்டார். இப்போதைக்கு அவர்கண் அயராமா!

அவன் பகல் உணவு என்று ஏதோ சாப்பிட்டான். பிறகு, நான்கு மணிக்கு ஒரு மிடறு தண்ணீர் குடித்தான். பிறகு எழுதுகிறான். எழுதிக்கொண்டே இருக்கிறான். அடிக்கொரு தடவை மணியைப் பார்த்துக்கொண்டான். மணியா அது! அதன்மீது அவனுக்கு ஆத்திரம், ஆத்திரமாக வந்தது. என்ன செய்யும் அவன் ஆத்திரம்?

அந்தக் கடிகாரத்திற்குக்கூட சில நாட்கள் அவனைப் பிடிப்பதில்லை. பழி வாங்கிவிடும்; திடீரென்று வேலை நிறுத்தம் செய்துவிடும்; நேரம் போவது தெரியாமல் மேலும் அரைமணி அவன் உழைத்துவிட்டுச் செல்வான்.

இன்று, நேற்று அவன் இப்படி உழைக்கிறான்! பத்தாண்டுகளாக உழைக்கிறான். முப்பது ரூபாய் சம்பளத்தில் தொடங்கியது இப்போது ஐம்பது ரூபாய் ஆகியிருக்கிறது. ஐம்பது ரூபாய். ஐந்து உயிர்கள் வாழ்வதற்கு ஐம்பது ரூபாய்! காலை எட்டுமணி முதல் இரவு ஒன்பது மணி வரை உழைப்பதற்கு ஐம்பது ரூபாய்! ஞாயிறு விடுமுறை கிடையாது. வேறு விடுமுறையும் இல்லை. முப்பது நாளும் உழைக்கவேண்டும். அதற்கு ஐம்பது ரூபாய்! முதலாளி சொல்கின்ற எல்லாக் கணக்குகளையும் எழுதவேண்டும். வருமானவரிக்காரனிடம் காட்டுவதற்கு ஒரு கணக்கு. முதலாளி மட்டும் பார்த்துக்கொள்வதற்கு ஒரு கணக்கு. வாடிக்கைக்காரனிடம் சொல்வதற்கு ஒரு கணக்கு. கடன்காரனிடம் காட்டுவதற்கு ஒரு கணக்கு.—இப்படிப் பல கணக்குகள் எழுதவேண்டும். இதற்கு மாதம் ஐம்பது ரூபாய்.

நிமிட முள் அரை வட்டம் தாண்டி இருந்தது. இன்னும் அரை வட்டம் கடக்கவேண்டுமே! பசி வயிற்றைக் கிள்ளியது. காது குப், குப் என்று அடைத்துக் கொண்டது. என்ன செய்ய முடியும் அவனால்? ஒருமுறை முதலாளியை ஏறிட்டுப் பார்த்தான். அவர் தாம்பூலத்தைச் சுவைத்துச் சுவைத்து மென்றுகொண்டு விழிகளைக் கொட்டக் கொட்ட விழித்தபடி ஏதோ இலாபக் கனவில் ஆழ்ந்திருந்தார். அவன் பேனாவைக் கீழே வைத்துவிட்டு ஒரு முறை கையை உதறிக்கொண்டான். என்ன எழுதுவது என்றே ஓடவில்லை. சும்மா உட்கார்ந்திருக்கவும் முடியாது. "எதிரில் அவன் தான் திண்டின்மீது சாய்ந்து கொண்டிருக்கின்றானே!" தவித்தான் அவன். தலை கிறு கிறு என்று சுற்றியது. நெற்றிப் பொட்டை அழுத்திப் பிடித்துக் கொண்டான். ஏதோ நினைவாகச் சட்டைப் பையில் கையை விட்டான். துழாவினான். திடீரென்று நினைவுக்கு வந்தது, தம்பிடி கூட அவனிடம் அப்போது இல்லை என்பது. இப்போது புதிய கலக்கம்: 'ஐந்து கல் நடந்துபோக வேண்டுமே! வலுவிருக்குமா காலில்? போதிய வலிவு இல்லை. இன்று பஸ்ஸில்தான் போகவேண்டும். பஸ்காரனுக்கு நாலணாவல்லவா கொடுக்கவேண்டும். சம்பள நாளாயிருந்தால் பரவாயில்லை. சரி, வழியில் வேலாயுதம் டீக் கடையில்—ஒரு போண்டா, ஒரு டீ; போதும். நடையைக் கட்டிவிடலாம். அதற்குப் பணம் வேண்டாமா? வேலாயுதம் கடன் கொடுக்கமாட்டான். நாலைந்து மாதப் பாக்கி — ஆறு ரூபாய்—ஏறிவிட்டது. ஒரு சல்லிக் காசுக்கும் இனிக் கடன் கொடுக்க மாட்டேன் என்று அன்றே சொல்லிவிட்டான் வேலாயுதம். பின் என்ன செய்வது! முதலாளியிடம் கேட்டுப் பார்ப்போமா? அடே அப்பா, அவரா கொடுப்பான். எதற்கும் கேட்டுத்தான் பார்ப்போமே—ஒரு எட்டணா!' மெல்ல முதலாளியின் முகத்தை நிமிர்ந்து நோக்கினான். அதற்குள்.

"அரே, கியா கணக்கப்புள்ளே, நிம்பள் செய்யறான்? கணக்கு எழுதறான் இல்லே. தலையைத் தொடறான், காது அமுக்கறான், காம் செய்யறான் இல்லே! உட்கார்ந்திருக்கிறான். மணி பார்க்கறான். போறான்

(14-ம் பக்கம் பார்க்க)

மாஸ்கோவின் புதியமுயற்சி

[அன்பு]

இன்று உலக நாடுகளனைத்தும 'அயல் நாட்டு உறவு'' 'அந்நியக் கடன்' என்ற புதுவித பசித்தன்மைகொண்டு பேசியும் இயங்கியும் வருகின்றன. சமீப காலமாக வெளிவரும் உலகத் தலைவர்களின் பேச்சுக்களிலெல்லாம் "அமைதி அமைதி'' என்ற சொற்கள் முன்னுரையாகவும் பின்னுரையாகவும் 'வெளிநாட்டு நட்பு' 'பொருளாதார உதவி' என்ற சொற்கள் உரையின் கருப்பொருளாகவும் இருக்கக் காணலாம். "அயல் நாட்டு உறவு" "அந்நியக் கடன்" என்ற சொற்களின் உண்மையான பொருள் ஒருபுறம் இருக்க, உலகின் பெரும் சக்திகள் பல அச்சொற்களை "வெவ்வேறு'' பொருள்களிலும் வழிவகைகளிலும்தான் உபயோகப்படுத்திக்கொண்டு வருகின்றன. சுருங்கக்கூறினால், உலகின் இன்றைய குழப்பங்களனைத்துக்குமே காரணம் இந்த இரு சொற்களையும் பெரும் நாடுகள் தங்கள் தங்கள் விருப்பங்களைப் பூர்த்தி செய்துகொள்வதற்கேற்ப உபயோகப்படுத்திக்கொண்டு வருவதுதான்.

எனவேதான் இந்த இரு சொற்களையும் உண்மைப் பொருளில், அமைதி வழியில் பயன்படுத்திச் செய்யப்பட்ட காரியங்கள் உலகில் தோன்றுவது காண்பதற்கு மிகவும் அரிதாயிருக்கிறது. காண்பதற்கு இதுபோன்ற அரியதொரு காட்சி மிக அண்மையில் மாஸ்கோவில் தோன்ற இருக்கிறது. பின்தங்கிய அளவில் முன்னேறிக்கொண்டிருக்கும் ஆசியா, ஆப்பிரிக்கா, தென்அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்தெல்லாம் சுமார் 4000க்கும் மேற்பட்ட மாணவர்கள்வரை, அங்கு மிக விரைவில் துவக்கப்பட இருக்கும் "சர்வதேச நட்புறவுப் பல்கலைக் கழகம்" என்ற அமைப்பில் சேர்ந்து வாழ்க்கையின் பல்துறைப் பிரிவுகளைப் பற்றியும் படித்து ஆராய இருக்கின்றனர். அந்த அமைப்பில் சேர்ந்து படிக்கும் மாணவர்களனைவருக்கும் சோவியத் அரசாங்கமே பொறுப்பேற்று எல்லாப் பொருளாதார உதவிகளையும் அளிக்க இருக்கிறது.

உலக நாடுகளிடையே நெருங்கிய நட்புறவுக்கான வழிவகைகளை அமைத்து, இரஷ்யா மற்ற நாடுகளோடு கொண்டிருக்கும் தொடர்புகளை மேன்மேலும் வளர்க்க உதவும் இத்திட்டத்தைப் பிரதமர் குருஷ்சேவ் தனது இந்தோனேஷிய சுற்றுப்பயணத்தில் இரு கிழமைகளுக்கு முன்பு (பிப்ரவரி 23) முதன் முதலாக அறிவித்தபோது, மற்றைய நாடுகளனைத்தும் ஆச்சரியத்துடனும் பேராதரவுடனும் இத்திட்டத்தை வரவேற்றன.

மனிதன், மனிதனை வெற்றிகொண்டு அடிமைப்படுத்துவதற்காகக் கோடிக்கணக்கான டாலர்களும், ரூபிள்களும் வாரியிறைக்கப்பட்டு வரும் உலக சூழ்நிலையில், இரஷ்யா இந்த நல்ல முயற்சிக்காக ஒரு பெரும் பங்கைச் செலவிட முன் வந்திருப்பது பாராட்டுதற்குரிய செயலாகும். ஒரு கையில் இராணுவ ஆயுதங்களையும், மற்றொரு கையில் அந்நிய உதவி என்ற சீட்டு ஒட்டிய பணப்பேழையும் வைத்துக்கொண்டு கூட்டுச் சக்திகளையும், இராணுவ ஒப்பந்தங்களையும் உண்டாக்கி வருவதைவிட, மனித சக்தியின் வளர்ச்சிக்கான அறிவியலைப் பரப்ப விரும்பியிருப்பது புனிதமான செயல்தான். அணு ஆயுதங்களின் மத்தியில் நின்றுகொண்டு, உள்ளொன்று இருக்கப் புறத்தில் மட்டுமே 'அமைதி,' 'சமாதானம்' என்று பேசிவருவதைவிடப், பல நாட்டு மாணவர்களையும் ஓரிடத்தில் கூட்டி மன அடிப்படையில் நட்புறவு கொள்ளச் செய்வதற்காகவும், அறிவியலை ஆக்க வேலைகளில் ஈடுபடுத்தும் திறனைப் படிப்பிப்பதற்காகவுமே ஒரு "சர்வதேச நட்புறவுப் பல்கலைக் கழ''கத்தை ஏற்படுத்துவது வரவேற்று மகிழ வேண்டிய செயல்தான்.

"ஒரு நாட்டின் மக்கள் மற்றொரு அயல் நாட்டு மக்களோடு திருமண உறவை ஏற்படுத்திக்கொண்டு வளர்த்து வருவார்களானால், குடும்பத்தில் அமைதிக்கு அவ்வப்போது சிறுசிறு ஊறுகள் தோன்றினும். உலகத்தில் நிரந்தரமான அமைதியும் சமாதானமும் தோன்றும்'' என்று வெஸ்டர் மார்க் (wester marck) என்ற அமெரிக்க சமுதாய நூலறிஞர் கூறியிருக்கிறார். இவரது எழுத்தில் மேற்போக்காகச் சிறிது வேடிக்கை தோன்றினாலும் அடிப்படையில் மிகவும் பொருளிருக்கிறது. எப்படியும் உலக அமைதிக்கு நட்புறவு அவசியம் என்பது இவரின் மூலகருத்து. இதுதான இன்றைக்கு வேண்டிய முக்கிய கருத்தும்கூட. மாஸ்கோ அண்மையில் சர்வதேச நட்புறவுக்காக என்றே தோற்றுவிக்க இருக்கும் பல்கலைக் கழகம் இந்த அறிஞரின் கூற்றை மற்றொரு வகையில் செயல்படுத்திக்காட்ட இருக்கிறது.

'உலக நாடுகள் தங்களிடையே ஏற்படுத்திக்கொள்ளும் இராணுவ ஒப்பந்தக் கூட்டுறவுகளைவிட, நட்புறவு ஒப்பந்தங்கள்தான் தேவையானது — சிறந்தது" என்று டில்லிப் பாராளுமன்றத்தில் டாக்டர் இராதாகிருஷ்ணன் அமெரிக்கத் தலைவர் ஐசனோவரை வரவேற்றுப் பேசுகையில அறிவுறுத்திய சொற்களைத்தான் கடைப்பிடித்துக் காட்ட முன் வந்துள்ளதுபோல் இருக்கிறது மாஸ்கோவின இப்புதிய முயற்சி. உலக அரசியல் பார்வையாளர்கள் கருத்துத் தெரிவித்திருப்பது போல் மேற்கு நாடுகள் அலட்சியம் செய்துவிட முடியாத ஒரு அறை கூவலாக உள்ளது, இரஷ்யாவின், அரசியல் பின்னணி ஏதுமில்லாத இம்முதல் முயற்சி.

உலக நாடுகளிடையே தோன்றிவரும் அயல்நாட்டு உறவு என்னும் புதுவிதப் பசித்தன்மைக்கு இதுபோன்ற "உணவு" கள்தான் மேன்மேலும் தேவையே தவிர, கொடுத்தாலும் ஜீரணிக்காத "இராணுவ ஒப்பந்தம்,'' 'கூட்டுச் சக்தி' போன்ற தீய உணவுகள் இனியும் தேவையில்லை.

★

ஓரங்க நாடகம்:

கலிங்கத்துப்பரணி!

காட்சி 1

[திரைக்குப் பின்னிருந்து ஒலி எழுகிறது.]

ஒலி:- (முரசு கொட்டி முத்தமிழ் மூவேந்தர் அரசுக்கட்டிலில் அமர்ந்திருந்த நாளில், பொற்றடங் கிரியின் மீது பொருகயல் பொறித்து மீண்ட வெற்றி கொள் பாண்டி மன்னர் வீற்றிருந்த பொன்னாளில், பனிக்கோட்டு மால்வரை மேல் பாய் புலிக் கொடியைப் பறக்கவிட்டவனின் பரம்பரை பாராண்ட நாளில், இமயச் சிகரத்தின் உச்சியிலே ஏற்றிய வில்லால் இறுமாந்து நின்ற — முகிலெட்டும் மலைக்குலங்கள் வான முகட்டினை முட்டுகின்ற சேர நாட்டின் செங்கோல்—செந்தமிழர் தனியாட்சி செழித்திருந்த நாளில், தனியரசு நிறுவி, தரணியாண்டு, பரணி பாடிய தமிழ்க்குலத்தின் வீர வரலாற்றிலே ஒரு பொன்னேடுதான் கலிங்கத்துப் பரணி! பொற்கோட்டு இமயத்தில் புலிச் சின்னம் பொறித்திட்டான், கற்கோட்டு மாமலையில் கனித் தமிழின் வீர வரிகள் கண்டான்; கயிலையங்கிரியின் உச்சியில் தமிழகத்தார் வீரத்திற்குக் கால்கோள் நாட்டினான் — அவன்தான் கரிகாலன்! அந்தச் சோழர் குல திலகத்தின் பரம்பரையிலே உருவான சோழப் பேரரசு கங்கையை வென்று, கடாரத்தைத் தோற்கடித்து, செங்களத்தில் போராடிச் சிங்களத்தை முறியடித்து, வங்கக் கடல் நடுவே வாணிப மரக்கலங்கள் ஓட்டி, வெற்றிச் செய்தியும், கொற்றக் குடையும் கொண்டு வீற்றிருந்த திருநாளில்... பாட்டால் தமிழ் மணக்கும் பைம்பூவார் எழிற்பூங்கா, நாட்டோர் வியந்து போற்றும் நல்லாறு காவிரியின் நன்கொடையால் செழித்திட்ட பொன்னாட்டு வேந்தன் — புலிக்கொடியோன் — குலோத்துங்கன் — புகழ்பரப்பும் தென்னாடன் வாழ்ந்த நன்னாளில் நடந்த நம்மவரின் வீர வரலாறு. வெற்றிக்கொடி நாட்டிய சரிதம்! செயங்கொண்டார் வீறு கொண்டு செதுக்கி வைத்த வீர காவியம்! கலிங்கத்தைக் கல்லறை மேடாக்கிய கருணாகரன் புகழ்பாடும் வெற்றிச் சித்திரம்! அதுதான் கலிங்கத்துப் பரணி!

கோ. தமிழ்ச்செல்வன்

சேரரையும், பாண்டியரையும் செறுகளத்தில் வென்று, ஒரு கணத்தில் வாகைசூடி, திருமுடி பூண்ட குலோத்துங்கச் சோழனின் ஆட்சி, தென்கடற் குமரி முதல், வடகங்கையாற்றுவரை விரிந்திருக்க, பணிந்திட்ட பகை மன்னர் திறை செலுத்தி வணங்கி நிற்க, கலிங்கத்து வேந்தன் மட்டும் காவிரிநாடனை மதியாமல் காலங் கடத்திக் கொண்டிருந்தான். அப்போது.]

[கலிங்கநாட்டுப் பேரவை]

அவையினர்:- மன்னாதி மன்னர் — அனந்தவர்மப் பேரரசர்...வாழ்க வாழ்க.

அனந்தவர்மன்:- அமருங்கள்! அமைச்சர்களே, படைத் தலைவர்களே, மற்றுமுள்ள ஆட்சி மன்றத்தினரே! எல்லோரையும் வரவேற்கிறேன். இனிப்,பேரவை தொடங்கட்டும்.

[முதலமைச்சரான கலிங்கராயர் எழுகிறார்.]

கலிங்கராயர்:- வாழ்க நின் கொற்றம், வளர்க நின் புகழ், வெல்க நின் கொடி!

அனந்தவர்மன்:- அறிவுடை அமைச்சர் கலிங்கராயரே, இன்று இச்சபை கூட்டப்பட்டதன் நோக்கம்...

கலி:- குலோத்துங்க சோழர்...

அன:- என் எதிரியின் பெயரை இனி ஒரு முறை இங்கு உச்சரிக்காதீர்!

கலி:- சோழ மன்னருக்குத் திறை செலுத்துவது பற்றி...

அன:- அக்கறையில்லை நமக்கு; அவசியமுமில்லை!

கலி:- அவன் வீரம் தாங்கள் அறியாததல்ல; அவன் படைபலம் கடலினும் பெரிது!

அன:- அதற்காக...

கலி:- இருமுறை திறை செலுத்தவில்லை நாம். கலிங்கத்தின் எதிர்காலத்தைப்பற்றிக் கவலைப்படுகிறேன்...... குலோத்துங்க சோழருக்கு இச்செய்தி எட்டியிருந்தால்...

அன:- ஆபத்து நேருமென அஞ்சுகிறீர்...

கலி:- ஆம், வருமுன் காப்பது மந்திரிக்கு அழகு என்பதால்...

அன:- ஆனால், சோழ நாட்டிற்கு அடிபணிவது நமக்கு அழகல்லவே!

கலி:- திறையென்ற பெயரால் சிறு தொகையாவது கட்டினால் பணிந்ததாகக் கருதிப் பகை பாராட்டமாட்டான்; அல்லது, இயலாமை குறித்து வேண்டிக் கொண்டாலாவது...... கலிங்கம் காப்பாற்றப்படும் என்கிறேன்.

அன:- என்னுடைய படைவலிமை அறியாது பேசுகிறீர், ஏடே நதோ! தொலைதூரத்தில் இருக்கும் சோழநாட்டை மனதில் எண்ணிக்கொண்டு கலிங்கம் கலங்குவதா?

கலி:- என் கடமை; சொல்லவேண்டியதைச் சொன்னேன்.

அன:- அத்துடன் முடிந்ததா உம் அறிவுரை? அஞ்சுகிறீர் சோணாடு கலிங்கத்தை அழித்துவிடுமென்று! முப்புறமும் சூழப்பெற்ற முதுகுன்றங்கள; அப்புறமோ அலைபாயும் நீலக்கடல்; பின் எப்புறமிருந்து அவன் படை இப்புறந் தன்னில் நுழையும்?

கலி:- அரசே, சோணாட்டின் எல்லைப்புறத்து வீரர்கள் இதனைக் கேட்டால்...

அன:- எல்லைப்புறத்து வீரர்கள்! என் கொல்லைப்புறத்து வாழைகள்! வரட்டும் சோழநாட்டான்....

கலி:- வரட்டுப் பிடிவாதம் வேண்டாம், அரசே!

அன:- (கோபத்துடன்) கலிங்கராயரே...!

கலி:- சோழன் படை, வலிமை மிக்கது.

அன:- இருக்கட்டும்!

கலி:- திறை கட்டினால் பிழைத்தோம்!

அன:- இல்லையேல்...

கலி:- என்னுருமோ இந்நாட்டு நிலை என அஞ்சுகிறேன். கலிங்க நாட்டிற்கே அழிவு நேரலாம்!

அன:- கலிங்கநாட்டிற்கா அழிவு? கோழைகளின் கொலுமண்டபமல்ல இது; சிங்கங்களின் பாசறை! வேட்டைப் புலிகளின் கூடாரம்! அண்டம் அதிர்ந்திடிந்து விழுந்தாலும், ஆழி புடைபெயர்ந்தாலும், அலைகடல்கள் பொங்கியெழுந்தாலும், மேதினியே ஒன்றுகூடி மேவி நம்மை எதிர்த்தாலும், பின்னிட்டு ஓடத் தயாராக இல்லை, முன்னிட்டு நிற்போம் போர் முனையில்! தோள்வலி காட்டி வாள்முனை நீட்டுவோம்; வெற்றி, அல்லது வீர மரணம்! கலிங்கத் தரையின் காணி நிலத்திற்கும் அந்நியன் உரியனல்லன். வெங்களத்தில் சோணாட்டைச் சந்திக்க விரும்புகின்ற புலிக்கூட்டம் இங்குண்டு! காவிரி நாட்டை முறியடித்துக் களம் வெல்ல, கலிங்கத்தார் தயார்! வெற்றி பெற்றால் வாகை மாலை! இல்லையேல் மரண ஓலை! நமது சாம்பல் மேட்டிலே சோழப் பேரரசு கொலுவிருக்கட்டும், நமது இரத்த வெள்ளத்திலே அவர்களின் ஆதிபத்தியப் படகு மிதக்கட்டும்! உடலிலே உயிர் ஒன்றிருக்கிற வரையில் — உயிர் தரும் உணர்ச்சி அணு ஒன்றிருக்கிற வரையில்—எந்தப் பலம் பொருந்திய எதிரிக்கும் கலிங்கம் பணியாது! இது உறுதி!! உள்ளத்தில் வீரக்கனல் உண்டு! எதிர்ப்போம் சோழ நாட்டை; இடிப்போம் சோழப் பேரரசுக் கோட்டையை! குலோத்துங்கனின் கொற்றத்திற்கு ஒருமுடிவு கட்டுவோம்-அல்லது நம் வாழ்வுக்கே விடிவு காணுவோம்! அமைச்சரே, பணிந்து நின்ற காலம் பழைமையின் காலம், துணிந்துவிட்டது கலிங்கம்! வெற்றி, அல்லது வீரச்சாவு!

கூட்டம்:- வாழ்க மன்னர்! வெல்க கலிங்கம்! வீழ்க சோழ மண்டலம்!!

[அவை கலைகிறது.]

காட்சி 2

[குலோத்துங்கன் காவிரிக் கரை விட்டுப் பாலாற்றுக் கரையேகல்]

காலாற் றண்டலை யுழக்குங் காவிரியின் கரைமருங்கு வேட்டையாடிப் பாலாற்றங்கரை மருங்கு பரிவேட்டை ஆடுதற்குப் பயணஞ் செய்ய முரசறைக என்றதுமே, முழுதுலகும் ஒரு நகரில் புகுந்த தொப்ப, திரை செய் கடல் ஒலியடங்கத் திசை நான்கில் படை நான்கும் திரண்டதாங்கே! ஒரு வலம்புரி முழங்கியொலிக்க, உடன் முழங்கின சங்கநாதம்! குமுறு வெம்புலிக் கொடி குலாவின! களிறுகள், புரவிகள் கடலெனத் திரண்டன! காலாட்படையினர் விரைந்து முன்னேறினர்! பாரெலாமுடையான் அபயன் தன் பங்கயக் கரம் ஒப்பெனக் காரெலாமெழுந்த காட்சி போற் சேனைகள் செல்ல, காஞ்சி நகர் புகுந்து: அம்பொன் மேருவரை இதுகொல் என்று ஆயிரங்கதிர் வெய்யவன் ஐயுறும் செம்பொன் மாளிகை தென்குட திக்கினில் செய்ததோர் சித்திர மண்டபந் தன்னிலே, மொய்த்திலங்கிய தாரகை வானின் நீள் முகட்டிலெழுந்த முழுமதிக்கு நிகரென, நெய்த்திலங்கிய நித்திலப் பந்தலில் நின்று வெண்குடை ஒன்று நிழல்தர, அங்கண் உலகனைத்தும் தோள்வைத்து ஆடகக் கிரியில் புலிவைத்தவன் சிங்க ஆசனத்திலே ஏறியிருப்பதோர் சிங்க ஏறென வீற்றிருந்தான். அப்போது, நாடகாதி நிருத்தம் அனைத்திலும், நால்வகைப் பெரும் பண்ணிலும் எண்ணிய ஆடல் பாடல் வல்ல அணங்குகள் வீற்றிருக்க; சூதர், மாகதர் முதலாய் துய்ய மங்கலப் பாடகர்; சோழன் பாதம் ஆயிரம் மன்னவர்கட்கெலாம் பைம்பொன் முடியெனப் பாராட்டியிருந்தார்; வீணை, யாழ், குழல், தண்ணுமை வல்லவர்,"வேறு வேறிவை நூறு விதம்படக் காணலாம் வகை கண்டன, நீயினிக் காண்டல் வேண்டும்'' எனக் கழல் போற்ற; தாளமும் செலவும் பிழையா வகை தான் வகுத்தன தன்னெதிர் பாடியே, காளமுங் களிறும் பெறும் பாணர்தம் கல்வியில் பிழை கண்டு கேட்டனன். வெங்களிற்று வேந்தர் பலர் வீழ்ந்தடி பணிந்தனர்; மண்டலத் தலைவரும், மாநில வேந்தரும் வந்து வணங்கினர்; தொண்டைமான் முதல் மந்திரச் சுற்றம் சூழ்ந்து அவன்கழல் சூடியிருந்தனர். முறையிடத் திருமந்திர ஓலையாள் முன் வணங்கி, திறையிடப் புறம் நின்றனர் வேந்தரெனத் தெரிவித்தான்.

திருமந்திர ஓலையாள்:- அரசே, தென்னவர், வில்லவர், கூபகர், சாபகர், கன்னடர், பல்லவர், காடவர் முதலாய், கங்கர், கடம்பர், வங்கர் மராட மன்னர்களும், சிங்களர், கொங்கணர் ஆகிய யாவரும் திறை செலுத்திவிட்டனர். புரவியும், களிறும், போர்ப்படை பலவும், நவமணிக் குவையும், இரத்தினக் குலமும் குவிந்தன; நம் பொருளறையும் நிறைந்தன...

குலோத்துங்கன்:- அரசர் குடிப் பெருமக்களே! அஞ்சேல்! சோணாட்டின் நண்பர்களே; ஈண்டு வந்து இவ்வவையைச் சிறப்பித்தமைக்கு மகிழ்வெய்தினேன். சோழ நாட்டின் நட்புக்குரிய சிற்றரசர்களே! என்றும் உங்கள் உறவு நிலைப்பதாக. (மந்திர ஓலையாளைப் பார்த்து) திறைசெலுத்தி நின்ற இவ்வரசர் தவிர மற்று உரை செயுந்திறைகள் செலுத்தாது ஒழிய நின்றவரும் உளரோ?

ஒலை:- (பணிந்து) மாமன்னரே, கடவ தந்திறை கொடுடைய வந்தரசர், கழல் வணங்கினர்; திறை செலுத்தினர், அவருடன் வடகலிங்கர் பதி இரண்டு விசையும் வந்திலன்; திறை தந்திலன்!

குலோ:- என்ன? வடகலிங்கத்தான் இருமுறை திறைசெலுத்தவில்லையா? (இலேசான புன்னகை எழவே, எல்லோரும் திகைக்கின்றனர்) இயலாமை கூறி விண்ணப்பம் ஏதும் அனுப்பவில்லையா கலிங்கன்?

ஒலை:- இல்லை அரசே!

குலோ:- மமதை! சோழ மண்டலத்தை மதிக்காத ஆணவம்!! இவைதான் காரணமாயிருக்க வேண்டும்—இருமுறை அவன் வராமலிருந்தமைக்கு!

கருணாகரத் தொண்டைமான்:- (கோபத்துடன் எழுந்து) கட்டளையிடுங்கள் மாமன்னரே! கலிங்கம் தூளாகும்; களம் காணத் துடிக்கின்றனர் படைவீரக் காளையர்கள்! திறை கட்டாக் கலிங்கத்தார் திருநாட்டில், இரத்த வெள்ளத்திற்குக் கரை கட்ட முடியாத களம் அமைத்து மீண்டு வருவேன்!

குலோ:- எளியன்; படைவலி இல்லான்; எனினும் வலிய குன்றரணம் இருக்கின்றதென மமதை போலும்! அவன்தன் கொடிய குன்றரண் இடிய நம் படைஞர் கடிது செல்க; அளியலம்பு மத மலைகள் கொண்டு அணைக; அவனையும் விரைவில் கொணர்க!

கருணா:- விடை கொடுங்கள்; கலிங்கனின் விலாவெலும்பு முறியும். இரத்த மழை பொழியும் கலிங்கத்தில்; செத்தவரின் தொகை தெரியாமல் மொத்தமாய் மடியும் கலிங்கம், பித்தர்களின் உடல் கிழித்துப் பீறிட்டு ஒழுகுகின்ற குருதிக் கடலில் குளித்து வரட்டும் நம்படைகள்! நானே தலைமை தாங்குகிறேன்; அவர்களின் இரத்தத்தில் நம் முத்திரையைப் பொறிப்பேன்; நரம்புகளில் கண்ணின் மணி முத்துக்களைக் கோர்த்து வாகை மாலை புனைவேன்; கலிங்கத்தாரின் உடைந்த எலும்புகளில் வீர காவியம் எழுதுவேன். வெட்டுண்ட தலைகளைக் குவித்து மலைகளாக்குகிறேன், கங்கைகொண்ட சோழ பரம்பரையின் ஆற்றலைக் கலிங்கம் உணரவைக்கிறேன்; கடலில் கலஞ்செலுத்தும் புகழுடைய தென்னாட்டை மதியாதார் உடலில் பெருகுகின்ற உதிரத்தில் மூழ்கி மீள்வேன்!

குலோ:- கருணாகரரே! துடிக்கும் மீசையும், வெடிக்கும் சொல்லும் குன்றையும் இடிக்கும் உமது தோள் வலிமையையும் நான் அறிவேன். செலுத்துக படையைக் கலிங்கம் நோக்கி! வெற்றி ஒலையுடன் விரைவில் மீளுக! சோணாட்டின் வீரத்தைக் கலிங்க மண்ணிலே ஓடப்போகும் இரத்த வெள்ளமே காட்டட்டும்!

கருணா:- அரசே, அடைய அத்திசைப் பகை துகைத்திட ஆர்வம் கொண்டேன்; விடை எனக்கு இடுக; விரைவில் மீள்வேன்; படைகள் தயாராயின!

அவையினர்:- வாழ்க சோழமண்டலம்! வீழ்க கலிங்கம்!!

குலோ:- விடை தந்தோம், படை புறப்படட்டும்!

கூட்டம்:- வாழ்க சோழமண்டலம்! வெல்க புலிக்கொடி!!

கருணா:- முரசுகள் ஒலிக்கட்டும்! சாமரைகள் வீசட்டும்! கொம்புகள் ஊதட்டும்! சங்கநாதம் பொங்கி முழங்கட்டும்! குடை நிரைத்திடுக! கொடி பறந்திடுக! இருநிலப் பரப்பிலும் இருள் பரக்க — ஒளி கரக்க எழட்டும் சேனை! வெல்க புலிக்கொடி! வெல்க புலிக்கொடி!!

[புலிக்கொடி உயர்த்தப்படுகிறது]

காட்சி 3

[எழுந்துவிட்டார் சோணாட்டு இகல்மறவர் கோபத்துடன்; இனி விழுந்து விடும் கலிங்கம் என்ற வேகத்துடன்! கொழுந்துவிட்டெரிகின்ற கோபக்கனல் — அழுந்திவிடும் இனிக் கலிங்கம் பாதாளத்தில் என்று அறைகூவும்படி, புறப்பட்டன புலிக்கூட்டம்!

குடையொடு களிறும் தொங்கல் குழாங்களும் கொடியின் காடும், இடையிடை மயங்கி எங்கும் வெளி கரந்திருளைச்செய்தது; படைகளும், முடியும், பூணும் படர்வெயில் பரப்பிச் சென்றன, கண்ணினின்று கனல் தெறித்தலால்-பொன்னணி எரித்த பொன்னொளி பரத்தலால் இருள் மறைந்தது; ஒளியெழுந்தது.

மலைகள் மதயானைகளாயினவோ? மாருதம் புரவியானதோ? முகிலனைத்துமே தேர்களானவோ? மூரி ஆழி போர் வீரரானதோ? பார் சிறுத்தலால், படை பெருத்ததோ? படையின் பெருக்கால் பார் சிறுத்ததோ? நேர் செறுத்தவர்க்கு நிற்பிடம் அரிது; நெடுவிசும்பலால் வேறிடமில்லையோ? எனவெடுத்துரைத்து அதிசயித்து நின்று இனைய மண்ணுளோர் மனம் நடுக்குறப் படையெழுந்தது!

கடல்நீர் பொழியும் தடமலைக் குலமென மொழிமதமுடையன யானை! கனல் விளைந்திடும்முகிலுள எனவிழிக் கனல்எரித்திடும் கரிகள் ஆயிரம்! கரியொடு பரிகளின் உடல் சிதைப்பன எனவுரைத்திடும் களிறுகள் பிளிறின ஓசை, உருமிடிப்பன போன்றன; வடவைக் கனல் உருத்தெழுந்தது போன்றது!

போர்முனையில் பகைவர்களின் பொன்முடியைக் குளம்புகளால் உதைத்துத் தள்ளி, நேர்முனையில் யானைகளின் முகபடாத்து முத்துக்களை நிலத்தில் வீழ்த்தி, பார் முழுவதும் துகள்உற, முகில்களையெட்டி உதைத்து, முகில்விடு மழைத்துளியொடு ஒலிகடல் அலையின் நிரையென விரைவொடு ஓடினகுதிரைக் கூட்டம்! கடலிடை விழுந்த இடிக்குலம் போல நடையினில் சிறந்த பரிகளின் தானை காற்றினுங் கடுகி, மின்னலின் வேகமும் பின்னிட ஓடின!

பெருநிலத்து மலைக் கூட்டம் பொருகளத்து உடைவனபோல், இடி முழக்கிச் செல்கின்ற சக்கரங்களால், பிணமலையைப் பிளந்தெறிந்து, நிணச் சேற்றை நீந்தித் தாண்டி, கணப்பொழுதில் கலிங்கத்தை அடையவென ஓடுகின்ற தேரின் கூட்டம்—உலகு உடையுமென அதிரொலியைக் கிளப்பிற்று!

விருதுகள் பல பெற்றவராய்; விழுப்புண் உடலினில் ஏற்றவராய் வடுக்களின் நிரைபல உடையவராய்; உடம்பும் சுமையென உன்னிப் போர் இடுபவராய், உயிரையும் விற்று உறுபுகழ் தேடச் செறுகளம்ஓடும் சிவந்த கண்ணினராய்க் காலாட்படையினர் கார்க்கூட்டமென எழுந்து, போர்க்கோலம் பூண்டு பொருகளம் காண முந்தி

னர்; பகைவர்தம் தலையினைப் பகழியால் துளைத்திட உந்தினர்!

கனைத்தெழுந்த குதிரைகளின் வாய் நுரைகள், கடலலைபோல் பொங்கியெழும் காட்சி கண்டோர் கலக்கங்கொண்டார்! கன்னங்களில் வடிகின்ற மதநீரோடு, கட்டிய தூண்களைப் பொடிபடவுதைக்கின்ற யானைகளின் இடியோசை கேட்டு, அலைகடலில் குளிக்கின்ற ஆகாய முகிற்கூட்டம் அஞ்சிப் பின்வாங்குவனபோல் செல்ல; கடுத்த விசையொடு, கணத்தில் உலகினை வலம் வரும் தேர்கள் எடுத்த கொடிகளால் இருண்டன போல் உலகில் இருள் பரக்க, எழுந்தது நால் வகைச் சேனை! எழுந்ததும், முறிந்தது பாரின் முதுகு! விழுந்தன காடும், மலையும்! வெறுந்தரையாயின திசைகள்! அதிர்ந்தன திக்குகள் நான்கும்! அடங்கின ஏழு கடலும்! பிளந்தன பெருமலைக் கூட்டம்! பிறந்தது புழுதிப்படலம்! நிலந்தரு புழுதி பருகி நிறைந்தது வானின் வயிறு! வலந்தரு மேகக் கூட்டம் வறண்டன நீர்கள் வற்றி! கரிகளின் மதநீர் ஒழுக்கால் — பரிகளின் வாய்நுரை நீரால் அடங்கின நிலத்தின் தூளி!

தண்ணாரின் மலர்த்தார பயன் தானேவிய சேனைக்குக் கண்ணாகிய கருணாகரன் இரைவேட்ட பெரும் புலிபோல் இட்ட படை நடத்திச் சென்றான்; இனிக் கலிங்கம் கெட்டதென நிலமடந்தை அலறி நின்றாள்!

அலைகடலும் பின்னோடும் ஆற்றல் மிகு சோழர் தானை, பாலாற்றின் கரை கடந்து, பல காதம் வழி நடந்து, கொல்லியெனும் நாலாற்றின் கரை தாண்டி, கிருஷ்ணை நதி பின்னிடவே முன்சென்று பெயர்ந்து ஓடி, கோதாவரி நதி மேலாறொடு குளிர் பம்பா நதியொடு, காயத்திரி யாறும் பின்னிடக் கடந்து, கடையிற் புடை பெயர் கடலென உலகம் கலங்கும்படி கலிங்கத்தின் உட்புகுந்து, எதிர்ப்பட்ட ஊர்களிலே எரிகின்ற நெருப்பேற்றி, கங்கையும் தோற்கக் கடல்போல் வந்த கடுஞ்சேனை வரக் கண்டு பயந்து மாந்தர், போர்ப்படை வந்தது; புகலிடமெங்கே? யாரிங்கரசர்? என்று கூவி அனந்தவர்மன் அரண்மனையின் உட்புகுந்தார்......

(அரசவை)

[மக்களில் சிலர் உள்ளே வந்து, சோழர்களின் படையைப்பற்றிச் சொல்கின்றனர்]

முதலாள்:- அரசே, மதில்கள்; இடிகின்றன; மாளிகைகள் பொடிபடுகின்றன.

இரண்டாமாள்:- மன்னா, பொழில் எல்லாம் புகை நெருப்பு எழுகின்றது; குடிகள் மடிகின்றனர்.

மூன்றா:- பகையென்று வளைகின்றன சோழர் படைகள்!

நான்கா:- குலோத்துங்கனின் சேனைகள் குமுறி வருகின்றன நம்மேல்!

[கலிங்கராயர் உடனெழுந்து]

கலி:- மன்னா, சோழனுக்குத் திறையிட்டுப் பணிந்திடுக என்று சொன்ன என் அறிவுரைகளைப் புறக்கணித்ததின் விளைவு இது! சூழ்ந்துவிட்டனவாம் சோழர் படைகள்! கலிங்கம் கலங்குகிறது!

அன:- என்ன? தென்னவர் படைகள் இவ்வளவு விரைவில் வந்து விட்டனவா?

கலி:- ஆம், அரசே. கலிங்கத்தின் அழிவு காலம் நெருங்குகிறது.

அன:- வரட்டும் படைகள்! எழட்டும் நமது சேனைகளும்! துரத்தட்டும் சோணாட்டு வீரர்களை! கலிங்கராயரே, உத்திரவிடுக; நம் படைகள் உடனே புறப்படட்டும்!

[இதற்குள் படைத் தளபதிகள் இருவர் உள் நுழைந்து மன்னனிடம்]

படைத்தளபதி 1:- அரசே; பூட்டிய கோட்டை வாசலுக்குள் புகுந்துவிட்டனர் பகைவர்; வேட்டைப் புலிகளென மாறி நம் ஈட்டிப் படையினர் எதிர்த்துப் போரிடுகின்றனர். தீட்டிய வாட்கலங்கள் துடிக்கின்றன போருக்கு! ஆணையிடுக; அழிந்திடும் சோழர் பட்டாளம்!

அன:- ஹ...ஹ...ஹா! (பயங்கரச் சிரிப்புடன்) கட்டளையிட்டுவிட்டேன்; வெட்டியெறியுங்கள் வீணர்களை; போர்களத்தில் புலிக்கொடியின் அச்சினை முறித்துப் புதைத்து வாருங்கள்; தென்னாட்டவனின் சேனையை மண்ணாக்குங்கள். நெருப்பாற்றில் நீந்தத் துணிந்துவிட்டனர் சோழர்! இரத்தக் கடலில் குளித்து மடியத் துணிந்துவிட்டனர் சோழர்! புறப்படுங்கள்; தலைகளைவெட்டியெறியுங்கள், ஈரல்குலைகளைப் பிளந்தெறியுங்கள்; ஈட்டிகளால் அவர்களின் இருதயத் தசையைக் கொத்தியெடுங்கள்; மண்டையோடுகளை உடைத்து மாலை கோர்த்து வாருங்கள்; சிரத்தினை உடைத்துச் சிதறடியுங்கள் மூளைச் சேற்றை! கரத்தினில் வலிவுள்ளோர் களம் செல்க; கயவர்மேல் பாய்க; காட்டாற்று வெள்ளத்தில் எதிர் நீந்தத் துணிந்துவிட்ட கோட்டான்களின் தலையினைக் கொய்து வருக!

தளபதி 2:- விடை கொடுங்கள்; நம் வீரர்களின் இரத்தப் பசிக்கு நல்ல வேட்டை; நிணச்சேற்றில் நீந்திக் களிப்போம்! மூடர்களின் முதுகெலும்பை முறித்துக்காட்ட—சோழர்களின் பச்சை இரத்தத்தைச் சுவை பார்க்க, கொழுப்புத்தசைகளின் உருசியை உண்டு களிக்க, உத்தரவிடுங்கள்; செத்தனர் சோழர்! செத்தனர் சோழர்!!

அன:- ஆம்! உண்மை!

கலி:- அரசே, மாற்றார் சேனையின் ஆற்றலை அறியாது பேசுகிறீர்கள்; கலிங்கம் பிணக்காடாகு முன் பணிந்து முறையிட்டால்...!

அன:- பணிந்துவிடும் காலம் பறந்துவிட்டதுபழமைநோக்கி! இனித் துணிந்து நின்று போரிடத்தான் வேண்டும்! கானரணும், மலையரணும், கடலரணும் சூழக்கிடந்த கலிங்கர் பூமி, தானரணம், தனியரணம் உடைத்தென்று கருதாது வருகிறது போலும் அப்படைகள்! வண்டினுக்குந் திசையானை மதங்கொடுக்கும் மலர்க்கவிகை அபயனுக்கன்றி, இத்தண்டினுக்கும் எளியனோ நான்? அழிவுக்கென்றே அனுப்பி வைத்தான் போலும் சோழன், இப்படைகளை, எனது நாட்டிற்குள்!

கலி:- சோழரின் படை வலிமையைக் குறைத்து மதிப்பிட்டீர் மன்னா! ஒன்று கூறுவேன்; சற்றுக்கேளும்! அரசர் சீறினும், அடியவர் உரைசெயாதொழியார் என்பது உறுதி! ஏனை வேந்தரை எறிய அச்சயதரன் தானையல்லது தான் வரவேண்டுமோ? விட்ட படையினால் மீனவர் ஐவருங் கெட்ட கேட்டினைக் கேட்டதில்லையோ? போரின்மேல் படை புறப்படுகென்றதும் புறமுதுகிட்டோடும் சேரர் செய்தி செவியில் படவில்லையோ? வேலை கொண்டு விழிரும் அழித்து, காந்தளூர்ச் சாலைகொண்டது அப்படையினாலன்றோ? மாறுபட்டெழுந்த வத்தவ வேந்தர், கூறுபட்டொழியக் கொன்றது அச்சேனையன்றோ? தளத்

(12-ம் பக்கம் பார்க்க)

வாழ முடியுமா?

நெஞ்சிற்கினியவனே!

வஞ்சக நெஞ்சினரால் நஞ்சாக்கப்பட்ட உன் நண்பனின் இறுதி எழுத்துக்கள் இதோ:

வாழ்வா? சாவா? என்பதை இன்னும் முடிவுசெய்யாமல் 'வாழ முடியுமா?' என்று அவலக்குரல் எழுப்பும் உன் பரிதாபத்திற்குரிய நண்பனின் வாழ்க்கைச் சுருக்கம்—

அமரா, ஏன் பிறந்தோம்? ஏன் வாழ்கின்றோம்? ஏன் சாகின்றோம்? என்பதை ஒரு துளியேனும் எண்ணிப்பார்க்காது பரபரப்பான வாழ்க்கையினால் தன் பகுத்தறிவைப் பறிகொடுத்த பாழும் சமுதாயம் என்னைப்பார்த்து என்ன சொல்கிறது தெரியுமா?

நல்லிதயம் அற்றவன்!

செய்ந்நன்றி கொன்றவன்!

சித்தம் கலங்கியவன்!

ஆம், நண்ப! உன்னுயிர்த் தோழனுக்கு ஊரும் உற்றமும் மற்றவர்களும் வழங்கும் பட்டங்கள் இவை! நம்ப மறுக்கிறாயா? அமைதியும் அடக்கமும் மிக்க உனது தோழனா 'இப்படி இருப்பான்' என்று?

நண்பனே, என் எழுத்துக்களை இங்கே உருவாக்கியிருப்பது என் இதயமல்ல. உலகத்தின் குரல், ஊரின் வாய், உண்மையறியார் நாக்கு! அவைகளை எழுதுகிறேன்! நீயாவது உண்மையை அறிந்து உன் நண்பன் செம்பியனின் உளநிலையை உணர்ந்துகொள்!

உயிருக்குயிரானவனே! நானும் நீயும் பள்ளியில் ஒன்றாகப் படித்தோம்! பிறகு நீ கல்லூரியை நாட, நான் அலுவல் தேட, நாம் பிரிந்த கதை தெரிந்ததுதானே! அப்பொழுது நான் 'இலட்சிய மூச்சு' விட்டுக்கொண்டிருந்தேன்.

சீர்திருத்த எண்ணங்களால் செம்மைப்படுத்தப்பட்ட உள்ளத்தோடு உலா வந்தேன்! விரைவிலே அலுவலும் கிடைத்தது! அப்பொழுதுதான் 'அருளப்பன்' எனது நண்பன் ஆனான். தமிழ் மொழிப்பற்று மிகுந்த அவன் என் நண்பனாகியதில் வியப்பில்லைதான்! என்றாலும், அவனுடைய முகத்தோற்றமும் பேசும் திறமும் அனைவரது உள்ளத்தையும் கவரும் திறனுடையன! அப்படிப்பட்ட 'தோழன்' எனக்குக்கிடைத்தான்.

ஆனால், அவனுக்கும் எனக்குமுள்ள வேறுபாடு; இல்லை, முரண்பாடு என்ன தெரியுமா? அவன்

மாழலன்

சிறந்த 'பக்தி'மான்! நானோ அதற்கு நேர்மாறானவன். இப்படி இருந்தும் காலம் எங்கள் தோழமையை வளர்த்தது.

அருளப்பன், படித்தவன், இளைஞன், நல்லெண்ணம் மிக்கவன். ஆனால், சாதிமதக்கோட்பாட்டில் தன் அறிவைப் பறிகொடுத்தவன். அதனால் எனது பகைவனாகவே மாறினான். எப்படித் தெரியுமா?

அருளப்பனின் தங்கை செங்கனி. அழகுமிக்கவள் என்று கூற முடியாது. ஆனால், அன்பு பொங்கும் உள்ளத்தினள். இளமையிலேயே பெற்றோரை இழந்த அவளுக்குத் தாயும் தந்தையுமாக இருந்து காத்தான் அருளப்பன். அவன் இமையெனக் காத்த செங்கனி என் உள்ளத்தில் புகுந்தாள். இல்லை, அவள் உள்ளத்தில் நான்தான் புகுந்தேன்!

கண்ணோடு கண்ணோக்கியவர்கள் எண்ணத்தோடு எண்ணம் சேர்க்க 'எழுத்தின்' துணைதேடினோம்! கடிதங்கள் தொடர்ந்தன! காதல் வளர்ந்தது!

அமரா, நான் திரைப்படங்களைப் பார்க்கும் பொழுது அதில்வரும் 'காதற்காட்சி'களைக் கண்டு இப்படியும் நடக்குமா? என்ற ஐயம் என் உள்ளத்தே எழுந்ததுண்டு. ஆனால், அவைகளைவிடச் சுவையான காட்சிகளைச் சான்றாகக் கொண்டு திகழ்ந்தது அன்றைய நாட்களின் என்றன் வாழ்க்கை.

களவொழுக்கம் கண்ட பிறகு 'மணவாழ்வு' காண அருளப்பனின் துணைநாடினேன். அவனோ சாதி வேறுபாடு காட்டிச் சாடினான். மத வேறுபாடு கூறி மறுத்தான். நான் சமண மதத்தவனாம். அது ஆகாதாம்! நான் எவ்வளவு வேண்டினேன். என்னைவிட 'செங்கனி'யின் கெஞ்சல் அதிகமாக இருந்தது. அதற்குச் செவிசாய்க்கவே மறுத்துவிட்டான் அருளப்பன்.

தமிழ்ப்பற்று இருந்தும் தமிழுணர்வு இல்லையே! கந்தப்புராணத்தைப் படிக்கும் அவனது கண்கள் அகநானூற்றைப் பார்க்க மறுத்துவிட்டன! என் உள்ளம் உடைந்தது. அவளை மறக்க, அருளப்பனைப் பகைத்தேன். நண்பர்கள் பகைவரானோம்.

அன்பற்ற அறிவுகெட்ட உலகின் சராசரி மனித உயிரான நானும் ஏதோ வாழ்ந்துவந்தேன். செங்கனிக்குத் திருமணமாம்! எனக்குத் துணிவோடு அழைப்பிதழ் அனுப்பினன். அங்கு செல்ல எனக்குப் பைத்தியமா என்ன?

நாட்கள் நகர்ந்தன. ஒரு திங்கள் ஓடிற்று. அந்த அவலச் செய்தி என் காதில் விழுந்தது. ஆமாம்; செங்கனியின் கணவன் முத்தையன் இறந்துவிட்டானாம். மணமான மறுவாரமே மனைவியை விட்டுவிட்டுச் சிங்கப்பூருக்குப் பயணமானன் முத்தையன். அங்கு ஏற்பட்டகொள்ளைநோய்க்குப் பலியாகிவிட்டான். செய்தியை அறிந்ததும் என்மனமே துடிதுடித்தது என்றல் அருளப்பனின் உள்ளம் என்னபாடுபட்டிருக்கும்? செங்கனியின் நிலையைச் சொல்லித் தெரிய வேண்டுமா?

முத்தையனின் மரணச் செய்தியைக் கேட்டதிலிருந்து அருளப்பன் படுத்த படுக்கையாகிவிட்டான். பார்த்தவர்கள் பலர் என்னிடம் சொன்னர்கள். என்னைப் பார்க்க விரும்புவதாகப் பன்முறை சொல்லியனுப்பினன். ஆனல் நான் ஒருதடவைகூட அவனைப் பார்க்க விரும்பவில்லை. இதை வந்தவர்களிடமே சொன்னேன். இதை அறிந்தோ என்னவோ செங்கனியே நேரில்வந்து அழைத்தாள். 'சீற்றிருந்த தென்றல் சிறந்திடும் பூஞ்சோலை'யான அவளைக்கண்டவுடன் என் நெஞ்சம் இளகியது. மறுநாள் அருளப்பனைச் சந்தித்தேன். எலும்பும் தோலுமாக உருமாறிய அவன் சொல்லுவான்;

"செம்பிய! சோம்பிய உள்ளத்தோடு வாழும் உன்னிடம் நான் வேண்டும் இறுதிக் கோரிக்கை—மறுக்காது ஏற்றுக்கொள். நண்ப! நானும் நீயும் பள்ளியிலே பயின்றவர்கள் அல்லர். இடையே எழுந்த நம் நட்பு 'செம்புலம் பெயனீர்' போல உருவாகியது. ஆனல், என் தங்கையை நீ மணக்க விரும்பியதை நான் மறுத்தேன்; எதிர்த்தேன்! ஏன் தெரியுமா? என் சுயநலத்தால் மட்டுமல்ல; உன் அன்னையின்வேண்டுகோளினலும்! கூர்ந்து கேள், தெளிவாகப் புலப்படும்.

தோழனே, நீண்டநாட்கள் என்னேடு பழகியும் என்னை நீ ஒரு பக்திமான் என்றுதானே நினைத்தாய்! அது தவறு. நான் உன்னையும் உலகையும் அவ்வளவுதூரம் ஏமாற்றினேன். நான் போட்டதெல்லாம் வேடம். எதற்காக? தெரியுமா? பணத்திற்காக. எனது ஒன்றுவிட்ட பாட்டியொருத்தி திரண்ட சொத்துக்கு உரிமைக்காரியாகத் திகழ்ந்தாள்! அவள் கண்மூடித்தனமான பக்திகொண்டவள். அவள் மனதில் இடம்பெற்றல், திரண்ட சொத்துக்கு ஏகபோக வாரிசாக மாறலாம் என்ற ஆசையில் பக்திமான் ஆனேன். ஆனல், என்னைவிடப் புத்திசாலி ஒருவன் 'கோவில் கட்டுவோம்' என்று ஆசைகாட்டி அவளை ஏமாற்றி, என்னையும் ஏமாற்றிவிட்டு எங்கோ போய்விட்டான். அதுகிடக்கட்டும்...

நான், பாட்டிக்காகச் சாதிக்கோட்பாட்டை உன்னிடம் காட்டினேன். அதேசமயம், உன் அன்னையும் அந்தச் சாதிமுறையை என்னிடம் எடுத்துச்சொன்னர்கள். சாதிக்கலப்புக்கொடிது என்பதால் அல்ல, எங்கள் குடும்பத்தின் ஒழுக்கக் கேட்டினல்! ஆமாம் என்னையும் செங்கனியையும் பெற்ற எங்கள் தாய் ஒரு கணிகை. ஒரு சாண்வயிற்றிற்காகத் தன் உடலை விற்று வாழ்ந்தவள். அவள் பெற்ற பெண்ணுக்கும் உனக்கும் திருமணமா? உன் தாய் ஒப்பவில்லை! அதை என்மூலமாகவே எதிர்க்க வழிசெய்தார்கள், உன் அன்னையார். அன்றைய பண ஆசையில் நானும் எதிர்த்தேன்.

களைப்பு மேலிட்டினல் பேச்சை நிறுத்தினன் அருளப்பன். அவன் பேச்சை எங்கோ பார்த்தவாறு நானும் கேட்டுக்கொண்டிருந்தேன். என் மனதில் எந்தவித தெளிவும் இல்லாது அமர்ந்திருந்தேன். மீண்டும் தொடர்ந்து அருளப்பன் கூறலுற்றான்:

"உன்னைப்போல செங்கனிக்குத் துணைவன் கிடைத்தல் அரிது. ஆனல், நான் உன்னைவிட்டுவிட்டு வேறு ஒருவனை மணம் முடித்தாலோ என்னவோ இன்று கைம்பெண் கோலத்தில் செங்கனி உள்ளாள். அவள் வாழ்வைப் பாழாக்கியவன் நான். இன்பமும் மகிழ்ச்சியும் மாறிமாறிப் பங்குகொள்ளும் வகையிலே வாழவேண்டியவள். அதை மாற்ற ஒரே வழி, எனது இறுதி ஆசை, ஆமாம; நீ செங்கனியை மறுமணம் செய்துகொள். அவள் வாழ்வில் ஒளியேற்று! நீ உன் நண்பனுக்குச் செய்யும் பேருதவி இது! மறுக்காதே! எப்படியாவது உன் அன்னையைச் சம்மதிக்கச்செய்" — கண்களில் நீரை வழியவிட்டுக்கொண்டு கெஞ்சினன் அருளப்பன்.

நான் குழம்பினேன். விரைவில் முடிவைத் தெரிவிப்பதாகக் கூறித் திரும்பினேன். என்னைப் பெற்ற தாயிடம் வேண்டினேன், நண்பனின் நிலையைச் சொன்னேன். நலங்கெட்ட செங்கனியின் பாழ் நிலையைச் சொன்னேன். ஆனல், நானே எதிர்பாராத வகையில், அவ்வளவு எளிதில் என் அன்னை சம்மதித்தார்கள்! நானும் ஓரளவு தெளிவு பெற்றேன்! செங்கனியை மணக்க உறுதிபூண்டேன்! இதில் நேரடியாகச் செங்கனியின் எண்ணத்தை அறிய ஆவல்கொண்டேன்.

செங்கனி ஒப்பினள். ஆனல், அதுபோழ்து அவள் சொன்ன அந்தச்செய்தி, எனனை என்னவோ செய்தது! அவளும் முத்தையனும் நடத்திய ஒருவார வாழ்வின் பயனக அவள் வயிற்றில் முத்தையன் பெயர்கூற ஓர் உயிர் வளர்கிறதாம்! என்ன செய்வது என்று தவித்தேன். முடிவில் எப்படியும் செங்கனியைத் துணையாக ஏற்பதென்று முடிவுசெய்தேன். நாளும் குறித்தேன்.

இந்த நேரத்தில், இயற்கை சதி செய்துவிட்டது. என அன்னை திடீரென்று இறந்துவிட்டார்கள். மணநாளினை மாற்றிவைத்தேன். இதற்குள் ஊர் பலப்படப்பேசிற்று. நான் செங்கனியை மணப்பதை ஒப்புக்கொள்ளாமல் எனை ஈன்றவள் தற்கொலை செய்துகொண்டாள் என்று. நானே கொன்றுவிட்டதாகவும் சிலர் சொன்னர்கள்.

எல்லாவற்றினும் அதிசயமான ஒன்று இப்பொழுது நடந்தது! ஆம், இறந்த முத்தையன் உயிரோடுவந்தான். அவன் இறந்துவிட்டதாக அவனது தாய்மாமன், தன் பெண்ணை மணந்துகொள்ளாததினல்செய்தி அனுப்பினனம்! விசித்திரமானநிலை—நான் விடுபட முயன்றேன், ஒதுங்கினேன்.

ஆனல், ஊர் தன் வாயை மூடவில்லை! 'உலகிலேயே பயங்கரமான ஆயுதம் நயவஞ்சகர்களின் நாக்கு!' என்ற எழுத்துக்கள் முழுக்க முழுக்க உண்மை! முத்தை

யனிடம் ஊர்பலப்பட பேசிற்று. எனக்கும் செங்கனிக்கும் உள்ள உறவால் அவள் கருவுற்றிருப்பதாக! சினந்தெழுந்த முத்தையன் செங்கனியைக் கொலைசெய்தான். இன்று சிறையிலே வாடுகிறான்!

கொலையுண்டாள் தங்கை! கொடுமைக்கார உலகம் பலப்பட பேசுவதில் தன் பணியைச்செய்தது! 'அருளப்பன்' தாங்கவொண்ணா நிலையில் தத்தளித்தான். மாசற்ற தங்கை மாண்டொழிந்தாள்! இதைவிட ஊரின் அவலம்—முடிவில் அவனை வரவேற்றது; தற்கொலை.

அருளப்பனும் இறந்துவிட்டான்!

இதயமற்ற உலகம் — மற்றவர் வாழ்க்கையில் மாசு கற்பிக்கவே பிறந்துவிட்ட பிறவிகள். அயலார் பேச்சே பயிலுறும் பண்பு என்று கொண்டவர்கள், பேசினார்கள் பேசுகிறார்கள்:

"நான் நல்லிதயம் அற்றவனும்; செய்ந்நன்றி கொன்றவனும்;சித்தம் கலங்கியவனும். நண்பனின் தங்கையைக் கெடுத்தேனாம் ;நல்லிதயம் இல்லாததால்! பெற்ற அன்னைமாள வழிவகுத்தேனும்; செய்ந்நன்றி கொன்றதால்! இன்று ஏதும்புரியாது இருப்பதால் சித்தம் கலங்கியவனும்!"

பெற்றவள் மாண்டாள்! காதலித்தவள் கொலையுண்டாள்! நண்பன் அழிந்தான்! நான் அமைதி இழந்தேன்!

எப்படியோ துவங்கி, எப்படியோ நடைபெற வேண்டிய என் வாழ்வு இப்படிக் கெட்டது!

நடக்கமுடியாத சம்பவங்களால், நினைக்க முடியாத நிகழ்ச்சிக் குவியலாகி விட்டதது என் வாழ்க்கை. இந்த நிலையில் நான் வாழ முடியுமா?

நண்பனே, நீயே சொல்!

நான் வாழ முடியுமா? வாழத்தான் வழி உண்டா? அப்படி வகை இருந்தாலும் நான் ஏன் வாழ வேண்டும்? எதற்காக?

பைத்தியக்காரத்தனமாக உள்ளனவா என் வினாக்கள்?

உண்மை! உண்மை! நான் இதயம் இல்லாதவன், இரக்கம் அற்றவன்! பைத்தியக்காரன்! — வாழத் தெரியாத இந்த உலகத்தில்! நல்லவர்களை வாழவிடாத நயவஞ்சசர்கள் உள்ள இந்த உலகத்தில்!!

உன்

செப்பியன்.

9-ம் பக்கத் தொடர்ச்சி

தொடும் பொருதானையெழுந்திடப் பண்டொருநாள் அளத்தி நகரம் களத்தில் விழுந்ததை அறிந்திலைப் போலும் நீ? கண்ட நாயகச் சிற்றரசர் காக்கின்ற நவிலையினைத் துண்டுபடுத்தியது அப்படையே யன்றோ? உழந்து தத்தம் மண்டலங்களைப் படையினால் இழந்த மன்னவர் எத்தனையென்று எண்ணுவேன்? கண்டுகொள் நாளைப் போர்க்களத்தில், கருணாகரன் ஆற்றலை!

அன:- கருணாகரத் தொண்டைமான்............

கலி:- படைத்தலைவன்; சோழனின் ஆணைச் சக்கரம்! கடுங்களம் பல கண்டவன், நெடும்புயவலிமை மிக்கவன; இன்று நீ சிறினும் நாளைப் போரினில் என்னுரை கண்டுகொள்! உண்மையை உணர்ந்துகொள்! மன்னா! வீணாகச் சோணாட்டின் பகையைத் தேடிக்கொணடீர்!

அன:- நிறுத்துக உம் வார்த்தையை! எனக்கெதிர் உரைக்க இமையோரும் நடுங்குவர்; குன்றுநிகர் இத்தோள்கள் போர்த்தொழிலால் பூரிக்கப் போகின்றன, அமைச்சரே! பிழைக்கவுரை செய்தாய், பிழைத்தனை! எனக்கு உறுதி பேசத் துணிந்தனை, என் பெருமை கெடவோ? அன்றிக் கலிங்கரின் அருமை படவோ? கொடுமத யானை கோளரிக் குருளையை முட்டத் துணியுமா? புலியைப் புள்ளிமான கூட்டம் போருக்கழைப்பதா? என்னுடைய தோள்வலியும்; வாள்வலியும் யாதும் அறியாது பிறர் போல் நின்னுடைய பேதைமையால் உரை செய்தாய்; பிழைத்துப் போவாய்!

(கலிங்கராயர் மௌனமாகினார். அரசன் படைத் தலைவர்களை நோக்கிக் கூறுகிறான்.)

ஆற்றலுடை படைத் தலைவர்களே, ஆணையிடுகிறேன், புறப்படுக; வேழம், தேர், வெம்புரவி, படைஞர் என்றினைய நம்படை விரைந்து கடுகிச், சோழ துங்கன் படையின் எதிர் சென்று தொடங்குக போரை! யானைகளை அணிசெய்க! களிற்றினத்தை நிரைப்படுத்துக! புரவிகளைப் போர்க்களத்திற்கு நடத்துக! தேர்கள் உருளட்டும்! காலாட் படையினர் எழுக! கொந்தளிக்கும் சோழர்களின் குருதியினைச் சுவை பார்ப்போம்; இரத்தச் சந்தனத்தை வெற்றி மார்பில் பூசிக்கொள்வோம்; முரசு முழங்குக! சங்குகள் பொங்குக! வலம்புரி ஒலித்திடுக! எதிர் சென்று சோழரை அதிரடிப்போம்! கோட்டைகள் இடிந்தாலும், கொத்தளங்கள் மடிந்தாலும், அரண்மனைகள் அழிந்தாலும், அடவிகள் தீப்பிடித்தாலும், கடல்கள் கொந்தளித்தாலும. கடும்புலிகள் வாய் பிளந்து காத்திருந்தாலும் கலங்காத கலிங்க நாட்டிற்கு ஒரு சோதனை!

தேர்க்காலில் உருள்கின்ற சக்கரங்கள் உடைக்கப்படட்டும்! வெந்தறுகண் யானையின் தந்த மருப்புகள் பொடி படட்டும்! குதிரைகளின் பொன்னுரைகள் குளம்புக் கால்கள் ஒடிபடட்டும்! போர் தொடங்கட்டும்! வெற்றி மாலை புனையட்டும் கலிங்கம்; வீழ்த்துவோம் சோழ மண்டலத்தை! ஆழ்த்துவோம் இரத்தக் கடலுக்குள்! கண்ணின கனலால் அவர்களை எரிப்போம்! இரத்தப் புண்ணின் சூட்டால் அவர் மண்டைகளைப் பிளப்போம்! கரங்கள் இற்று விழுமட்டும், சிரங்கள் அற்று விழுமட்டும்; எலும்புகள் கழன்று தரையில் சிதறுமட்டும்; தலையோட்டு மூளை சிதறித் தரையை மூடுமட்டும்; புடைத்த நரம்புகள் உடைத்த தலைகளைப் படைத்த போர்க்களம் வெடிக்குமட்டும் போரிடுங்கள்! குருதிக் குட்டத்தின் செந்நீர் வானத்துப் பரிதி வட்டத்தை மறைக்குமட்டும் போரிடுங்கள்! எதிரிகளின் எலும்போடுகளை அடுக்கி வீர கோபுரம் செய்வோம்; கபால ஓடுகளில் சிலைகள் செதுக்குவோம்; அவைகளை இரத்தத்தில் குளிப்பாட்டுவோம்! போர்! போர்! போர்! போர்!!

(தளபதிகள் வணங்கி விடைபெறல், கலிங்க நாட்டுக் கொடி உயர்த்படல்)

(திரை விழுகிறது)

[அடுத்த இதழில் முடியும்.]

இடத்தில் நின்றுகொண்டேன். அவள் சிறுத்தாள். அவன் அவளைப் பாராததுபோல விலகி நடந்தான். அவள் வேகமாக இரண்டடி நடந்து அவன் முன்னால் போய்ச் சிறிது மறைவான இடம் வந்ததும் நின்றாள். என் மனம் கொதிப்பேறியது. இருந்தும் கட்டுப்படுத்திக் கொண்டு நின்று கவனித்தேன்.

"இந்தா...ஏன் இப்படிப் பயந்து ஓடறே...?" என்றாள் அவள். அவன் அசைவற்று நின்றான். "பசிக்குது....வா...ஏதாவது......" என்று கூறி நிறுத்தினாள். அவன் அவளையே விழுங்குபவன்போன்று பார்த்தான். என் மனம் திடுக்கிட்டது. அவன் முதுகில் ஓங்கி ஒரு அறை கொடுக்கலாமா என்றும் எண்ணினேன். "பொறு" என்று என்மனம் கூறியது. கற்சிலையாக நின்றேன்.

அவன் மடியில் வைத்திருந்த நலணாவை எடுத்தான். கையில் வைத்தபடி, "இந்தா, நானும் உன்னைப்போல காலையிலேயிருந்து பட்டினிகிடந்தேன். ஒரு ஆளிடம் 'பாலீஷ்'போடுறேன்னு கேட்டேன். அவர் இந்தக் காசைச் சும்மா கொடுக்கவந்தார். நான் வாங்க மறுத்து, பாலீஷ்போட்டால்மட்டும் கொடுங்க போதும்னு சொன்னேன். பிறகுதான் அவர் பாலீஷ் போட்டுக்கொண்டு இதைக்கொடுத்தார். பசியோ காதை அடைக்குது; நீயோ அதையும் கேட்கிறே......!" என்றான். அவன் குரலில் துக்கம் கப்பியிருந்ததை உணர்ந்தேன்.

இதைக் கேட்ட அவள், "நீ ஒன்றும் சும்மா கொடுக்கவேண்டாம். பசியை அடக்க என்கிட்டே ஒன்றுமேயில்லே" என்றாள்.

என் மனம் துணுக்குற்றது. மான உணர்ச்சியின் இலக்கணத்தை மீண்டும் எண்ணிச் சிந்தித்தேன். பசிக்கொடுமையின் விளைவால் உழன்றபோதும் மானம் மரியாதை, நேர்மை, நெறி இவைகளைக் கடைப்பிடித்த அவனும், இவையாவையும் பொருட்படுத்தாமல் பசிக்கொடுமைக்காகப் பெண்மையைப் பேசும் அவளும், எதிரில்தான் நின்றனர். ஆனால் இந்த இருகோணங்களும் என் இதயத்தைச்சம்மட்டிகொண்டு தாக்கின. இவ் வேற்றுமைகளைச் சீர்தூக்கிப் பார்த்தேன். இவை இவர்களின குற்றமல்ல — இது போன்று ஏராளமாக இன்று நடக்கின்றன என்று தெரிந்தும் 'சிலை'யாக இருக்கும் பெரிய மனிதர்களின் குற்றம்தான இது என்று என் உள்ளம் உறுத்தியது.

இதற்குள் அவன், "இந்தா...... வைச்சுக்கே..." என்று அந்த நாலணாவை அவளிடம் போட்டுவிட்டு விரைவாக நடந்துகொண்டிருந்தான். நான் துண்டை எடுத்துத் தலையில் கட்டிக்கொண்டு அவனையும் தாண்டி வேகமாக நடந்தேன. மீண்டும் 'பர்ஸை'த் திறந்தேன். நாலணா மட்டும் இருந்தது. அதை எடுத்துக் கைநழுவி விடுபவன்போல சிறிது வெளிச்சம் உள்ள இடத்தில் கீழேபோட்டுவிட்டு மேலும் விரைவாக நடந்தேன். காசுவிழுந்த சத்தத்தைக் கேட்ட அவன் அவசரமாக அதை எடுத்து, "சார்...காசைப்போட்டுட்டுப் போறீங்க...!" என்று கத்தினான். நானா திரும்பிப்பார்ப்பவன. ஓட்டமும் நடையுமாக நடையை விரைவுபடுத்தினேன. என் உள்ளம் என்றுமில்லா மகிழ்ச்சியை—படிப்பினையை அந்த அரைரூபாயால்— அடைய முடிந்தது.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

காசு வாங்கறான். நம்பள் காம் அப்படியே கெடுக்குறான்."

முதலாளியின் குரல் அவன் எண்ணத்தை மாற்றிவிட்டது. பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டான். ஓரக்கண்ணால் மணியைப் பார்த்தான். 'அட பாவி, கால் மணி நேரம் விட்டுவைக்கக் கூடாதா!'

மணி ஒன்பது அடித்தது. அதை அவன் செவிகள் கேட்டன. உள்ளத்திற்கு அனுப்பவில்லை. முதலாளியின் சீற்றம் ஒரு புறம். கையில் தப்பிடிகூட இல்லையே என்ற கலக்கம் ஒருபுறம். பேரிடர் சூழ்ந்து, சூழ்ந்து தாக்கும் அவல வாழ்க்கைமீது கொண்ட வெறுப்பு ஒருபுறம் — அவன் எழுதினான். உணர்வைக் களைந்தெறிந்துவிட்டு எழுதினான். இயந்திர கதியில் எழுதிக்கொண்டே இருந்தான்.

மணி பத்தைத் தாண்டிவிட்டது' அவன் அங்கிருந்து வெளியேறும் போது. பசியும், தாகமும், உறக்கமும், சோர்வும் அவனுடன் வழித்துணைக்குக் கிளம்பின. இன்று, நேற்று இந்த நிலை. எத்தனையோ ஆண்டுகள். குளிர்; நடுக்கும் குளிர்! அவன நடந்துகொண்டே இருந்தான். வழியில் தென்பட்டது தண்ணீர்க்குழாய். இப்போதைக்கு அவனுக்குக் கிடைக்கக்கூடியது அந்த அமுதந்தான், ஆவலாகச் சென்று குழாயைத் திருப்பினான். குழாய் நீரைக் கொட்டவில்லை. ஏதோ இரைந்தது. சரிதான், மணி பத்துக்கு மேல் எந்தக் குழாயில் தண்ணீர் வரும்! இனி வேலாயுதம் கடைதான் தாகத்தைத் தீர்க்கவேண்டும். விரைந்தான் அங்கு.

வேலாயுதம் கடையை எடுத்து வைத்துச்கொண்டிருந்தான். தண்ணீர்ப் பானை கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தது. அவன் வாய் திறக்கவில்லை. இன்னும் ஐந்து கல் நடக்கவேண்டும், தண்ணீராவது குடிக்க வேண்டுமானால்!

அவன் நடந்தான். எதிரே ஒரு சிறு கூட்டம் வந்துகொண்டிருந்தது. அவர்கள் உரக்கப் பேசிக் கொண்டும, சிரித்துக்கொண்டும் வந்தார்கள். அவர்கள் என்ன பேசுகின்றார்கள் என்று அறிவதற்கு அவன் விழையவில்லை. ஆயினும் அவர்கள் பேச்சு அவன் காதில் வந்து விழுந்தது.

"இந்தத் தடவை இரண்டு மாத போனஸ் கேட்கவேண்டும். இப்போதே அறிக்கை வெளியிட்டு முன்னேற்பாடுகள் செய்யவேண்டும். எல்லாரும் விழிப்போடு இருந்தால்தான் காரியம் கைகூடும். இல்லாவிட்டால் நிர்வாகத்தார் தட்டிக்கழித்து நழுவிவிடுவார்கள். சந்தா வசூல் தீவிரமாக நடைபெறட்டும். அங்கங்கே உள்ளவர்கள் தனித்தனி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள்."

இந்தப் பாட்டாளி அந்தக் கூட்டத்தின் பேச்சைக்கேட்டு ஏங்கினான். "நான் மட்டும் பாட்டாளி இல்லையா? உழைப்பவன் இல்லையா? எனக்காகப் பேசுவோர் யாருமே இல்லையா? நியாயமான கூலி, காலவரையறை, விடுமுறை வாய்ப்பு — இவற்றைப்பற்றி எல்லாம் என்னால்எண்ணிப்பார்க்கவே முடியவில்லையே."

அவன் விட்ட ஏக்கப் பெருமூச்சு அந்தக்கூட்டத்திற் சென்ற யாருக்குமே தெரியாது. தெரியப்போவதும் இல்லை.

★

கடிமணம் கூடிற்று

—[கரிகாலன்]—

[தலைமகனும் தலைமகளும் கலந்து உறவாடி இன்புற்று வாழ்ந்த நாளில், பொருள் சேர்த்தலின் பொருட்டோ, பொருமுனை செல்லும் பொருட்டோ தலைவன், தலைவியைவிட்டுப் பிரிய நேருகிறது. தலைவியைத் தனியேவிட்டுச் செல்லும் தலைவன், தலைவி தனித்திருக்க ஆற்றாளாய் துடித்து வாடி உயிர் துறப்பினும் துறப்பள் என்று எண்ணி, திரும்பி வந்து தலைவியின் இசைவு பெற்று வேற்றிடங்கட்டுச் செல்லுவான்.

குறித்த காலத்துத் தலைவன் வாராத போழ்தில் தலைவி, தோழியிடம் தலைமகன் முன்னளித்த இன்பத்தையும்; இன்று பிரிந்து தரும் துன்பத்தையும் சொல்லி, நீள்விழிகளில் நீர்வார்த்து அழுவதையும்; இயற்கையைக் கண்டு அவைகளிடம் தனது தனிமையை எடுத்தியம்பித் தலைவனைக் காணத் துடிப்பதையும்; தலைவனின் மார்பில் முயங்கும் நாளை நினைந்து வாடுவதையும் கூறுவதாகப் புலவர்களால் பாடப்பட்டவை காதலின் மாட்சியை இன்றும் நாம் உணர்ந்துகொள்ள உதவுகின்றன.

தவறாது பகற்குறிக்கண் வந்து களவொழுக்கத்தில் தலைவியோடு ஆடிப்பாடி இன்புற்ற தலைவன், ஒருபொழுது அவண் வாராதிருத்தலாலே வருந்திய தலைவி, பின்பு தோழியிடம் உரையாடிக்கொண்டிருக்கிறாள். அதனை இங்குக் காண்க.]

தலைவி:- ஏடி தோழி! நீ இதனை அறிந்தனையோ?

தோழி:- யாதெனச் சொல்லிடின் அறிவேன்; சொல். உம் சொல்.

[இவர்கள் இருவரும் உரையாடும் காலை தலைமகன், தலைவியைத் தேடிப் பகற்குறிக்கண் வருகின்றான். அது கண்ட தலைமகள் மறைவிடத்தில் நின்று கீழ்வருமாறு செப்பலுற்றாள்.]

தலைவி:- தலைவனை, தனியிடத்திற் கண்டு காதல்கொண்டு களவொழுக்கத்தில் நான் முயங்குவதை என் தாய் அறிந்துகொண்டுவிட்டாளடி.

தோழி:- ....எப்படி?

தலைவி:- நேற்று, நானும் என் தாயும் இம் மலைச்சாரலின் கண் வந்துற்றோம். அதுபோழ்து என் மனம் காற்றினில் அலைந்திடும் கொடிபோல் வாடி, ஆற்றொணாத் துயரில் ஆழ்ந்துபடலாயிற்று. விடியற்காலையில் பெய்த மழையினால் ஏற்பட்ட நீர், நல்ல உயர் மலையினின்றும் தங்காது கடுங்கடலன்ன ஓடி வரும் அருவி, அகன்ற பெரிய காட்டினிடத்துச் சென்று தங்கியோடும் அழகைக் கண்டேன். அது காதலரைக் கண்டு கலந்துரையாடி இன்புற்ற இடமாதலின் ஆசையை அடக்கவும், அடக்குமளவில் நில்லாது, நீள்விழிகள் நீரைப் பெருக்கிட அழலானேன்.

தோழி:- தலைவி! நீ அழுத காரணத்தை நான் அறியலாமோ?

தலைவி:- தோழி! தெரிந்தும் தெரியாதவளாய் வேடிக்கை செய்கின்றனையா?

தோழி:- ...இல்லை; உன்னிடம் நானா விளையாடுவேன்?

தலைவி:- நேற்று முன்னாள் தலைவர் எனைக்காண இவண் வாராததால் ஏற்பட்ட விளைவுதான்.

தோழி:- பின், நின் தாய் நீ அழக் கண்டு என்ன சொல்லினள்?

தலைவி:- என் தாய் என்னை நோக்கி "நீ ஏன் அழுகின்றனையோ? இனி அழாதே; நினது ஒளி வீசும் முத்துப்பற்கள் மகிழ்ச்சியை அடையுமாக" என்று, என் அழுகையின் காரணத்தை அறியாதவளாய் மேன்மையான இனிய சொற்களைக் கூறலானாள். அதனை யான் செவியேற்காது, மிக விரைந்து உயிரினும் உயர்வுடைய நாணத்தையும் மறந்தவளாய், மலைச்சாரலிடத்துள்ள காந்தள் மலரின் மதுவையுண்ட, நீலமணியன்ன நிறத்தையுடைய வண்டானது யாழிற் கட்டிய நன்னரம்புஒலித்தல்போல் இசை பாடி நிற்கும், விண்ணளாவும் மலையையுடைய தலைவரது மார்பில் தோய்ந்து முயங்காமல் பிரிந்தமையால் ஏற்பட்ட வருத்தத்திற்கு அழுதேன் என்று சொல்லத் தொடங்கி, பின் நினைவு மேலிட அன்னை என்றறிந்திடவே, அந்த நெருக்கடியினின்று நீங்கிப் பிழைத்தேன். என் தாய், நான் தலைவரோடு முயங்குவதை அறிந்துகொள்ளத் தலைவரின் பிரிவுதான் காரணமாயிற்று. இனி நான் இங்கு வரத் தடை பலவும் ஏற்படக்கூடும். எனவே, விரைவில் அவர் என்னை மணந்துகொள்ளுதலே நலம்.

தோழி:- நல்லது. அதைத்தான் நானும் சொல்ல எண்ணினேன். நின் காதலர் களவொழுக்கத்தை இனி நீட்டிக்க முயலுவாராயின் நின்னை அவர் காணலும் அரிதாகும்.

[தலைமகன் அங்கு வந்து இவ்வுரையாடலைக் கேட்டுத் தன் தவறை உணர்ந்து, பின் வெளிப்பட்டு...]

தலைவன்:- அன்பே! நின் துன்பம் அறிந்தேன். இனி என்றும்

நாம் பிரியோம். இதுகாறும், நம் திருமணத்தை விரைவில் முடித்திடவே ஆவன செய்து கொண்டிருந்தேன். முயற்சி திருவினையாக்கும் நாளும் நெருங்கிவிட்டது. நின் திங்கள் முகத்தில் களங்கமே இருக்கக் கூடாது. எனை நினைந்து உன் அங்கமெலாம் இனி வாடக் கூடாது. இன்பமே! நாம் மீண்டும் மணக்கோலத்தில் சந்திப்போம். தோழி! நீ உடனிருந்து இவளைக் கவனித்துக்கொள். வருகின்றேன்.

[தலைவன் போகிறான்]

தலைவன், தலைவியின் வாட்டமறிந்து, அவளை யாற்றிப் பின் ஏகினன். களவொழுக்கத்தை நீட்டித்தலாகாது என்பது பெண்களின் விருப்பம். தங்களின் கற்புக்குப் பங்கமின்றிக் காத்துக்கொள்ள வேண்டித் திருமண விழாவையே இனிது நோக்குகின்றனர். ஆயின், ஆண்களின் விருப்பம் அதனை நீடிப்பதேயாகும். களவொழுக்கத்தாற் பெறும் இன்பம், மணம் முடித்த பின்னர் மகிழ்வைத் தாராது, எனற தவறான எண்ணமே ஆண்களை வாளா இருக்கச் செய்கின்றது. எனவே முன்னிலைப் புறமொழியாகத் தலைவி, இதனைத் தோழிக்குச் சொல்லினள். தலைமகன் இதனையறிந்து தன் தவறை உணர்ந்து, தலைவி மகிழுமாறு மணம் செய்துகொள்ள உடன்பட்டனன்.

மேற்கண்ட கருத்தமைந்த நற்றிணை 17ஆம் (கஎ) செய்யுளைக் கீழே காண்க:-

நாள்மழை தலைஇய நன்னெடுங் குன்றத்து
மால்கடல் திரையின் இழிதரும் அருவி
அகலிருங் கானத் தல்கணி நோக்கித்
தாங்கவுந் தகைவரை நில்லா நீர்சுழல்
பேந்தெழின் மழைக்கண் கலுழ்தலின் அன்னை
எவன்செய் தனையோநின் னிலங்கெயி
றுண்கென
மெல்லிய இனிய கூறலின் வல்விரைந்
துயரினுஞ் சிறந்த நாணு நனிமறந்
துரைக்கலுய்ந் தனனே தோழி சாரற்
காந்த ளூதிய மணிநிறத் தும்பி
தீந்தொடை நரம்பின் முரலும்
வான்றோய் வெற்பன் மார்பணங் கெனவே.

[தலைஇய—பெய்த; எயிறு—பற்கள்; தும்பி—வண்டு; வெற்பன்—மலைநாடன்; அல்கணி—அகலணி.]

இப்பாடல் பன்னிரண்டடி கொண்ட அகவற்பாவாகும். குறிஞ்சித் திணையைச் சேர்ந்த இப்பாடலினால், மலைநாட்டுத் தலைமகனைப் பற்றியும், அம்மலை நாட்டின் சிறப்பினையும் நாம் எளிதில் உணர்ந்து இன்புறலாம்.

குறிஞ்சி:- தலைவனும் தலைவியும் பகற்குறிக்கண்ணும் இராக்குறிக்கண்ணும் கண்டு கலந்துறவாடும் களவொழுக்கத்தைக் கூறும் திணையே குறிஞ்சியாகும்.

இப்பாடலைப் பாடியவர் புலவர் நொச்சிநியமங்கிழார். நொச்சிநியமம் எனும் ஊரின்கண் பிறந்ததனாலேயே இப்பெயரால் அழைக்கப்பட்டார். இவர் பாடியவையாக நற்றிணையில் மூன்றும், அகநானூற்றில் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றுமாக ஐந்து பாடல்கள் கிடைத்துள்ளன.

களவொழுக்கத்தாற் காலம் நீட்டித்த தலைவன் கடிமணம் செய்ய உடன்படச் செய்த தலைவியின் கற்புத் திறனை இப்பாடலினால் நாம் அறிந்துகொள்ளலாம். ஊர் அலர் தூற்றுமுன் களவொழுக்கத்தை நீட்டிக்க விரும்பாது ஊர் போற்றும் ஒப்பற்ற திருமணத்தையே தலைவி நோக்குகிறாள். தலைவி, பழிச்சொல்லை ஏற்குமுன், தன் காதற் களஞ்சியத்தைத் தனக்கே உரிமையாக்கிக் கொள்வான் வேண்டியே கடிமணத்தைத் தலைவன் ஏற்றுக்கொண்டனன். களவொழுக்கத்தாற் கடிமணம் கூடிற்று.

மதுரைக் கூடலில் முன்னாளில் நிலையிட்ட தமிழ்ச் சங்கப் புலவர் பல்லோரால் பாடப்பட்ட எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணையும் ஒன்று. அற்றைக் காலத்துக் கால, இட வேறுபாடுகளின் இடையே பற்பல புலவர்களால் அகவற்பாக்களாகப் பாடப்பெற்றது. இந்நூலில் ஒன்பதடி முதல் பன்னிரண்டி வரையிலுள்ள நானூறு அகவற்பாக்களைத் தொகுத்து நற்றிணை என்று ஆக்கினர்.

நற்றிணையின் கண்ணுள்ள பாடல்களில் அந்நாளில் வாழ்ந்த தமிழ் மன்னர் தம் வீரச் செயல்களையும், நாட்டு வளங்களையும் குடிமக்கள் கூடிக் களித்து வாழ்ந்த சுவையான செய்திகளையும், கல்வி கேள்விகளில் ஆண் பெண் இருபாலாரும் சிறந்திருந்ததையும், புலவர்களால் புனைந்துரைக்கப்பட்ட இயற்கை தழுவிய கற்பனைகளையும் ஆங்காங்கும் காணலாம்.

★

இனிக்கும் செய்தி

வாசக அன்பர்களும், விற்பனையாளர்களும் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்—

"தம்பிக்கு, அண்ணன்"

எழுதுவது, சித்திரைத் திங்களில் இருந்து தொடங்கப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
"திராவிட நாடு"

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

தீபாவளியன்று
திரை உலகில் புதியகுரல்
நேஷனல் பிக்சர்ஸ்
தயாரித்த
பராசக்தி
திரைக்கதை வசனம்:
மு.கருணாநிதி
ஸ்டுடியோ:
ஏவி எம்
G.H.RAO

திராவிடநாடு
பாலு
பிரதர்ஸ்
பொங்கல் மலர்

தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும்
வெற்றிகரமாக நடைபெறுகிறது

வசனம்: **மு. கருணாநிதி** பாடல்கள்: **கண்ணதாசன்**

விநியோகிப்போர்:

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை உள்பட: ராமநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி; வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சித்தூர், பாண்டிச்சேரி உள்பட: கீதா பிக்சர்ஸ், குடியாத்தம்; திருச்சி, தஞ்சை, காரைக்கால் உள்பட: ராணி பிக்சர்ஸ், திருச்சி; கோவை, நீலகிரி: கோயம்புத்தூர் பிக்சர்ஸ், கோயம்புத்தூர்; சேலம்: ஸ்ரீ ஆறுமுகம் பிக்சர்ஸ், பொள்ளாச்சி; மலபார்: ராதாகிருஷ்ண பிலிம்ஸ், ஆலப்புழை; மைசூர் ஸ்டேட், தென் கன்னடம், குடகு: யசோதா பிலிம்ஸ் கார்ப்பரேஷன், பங்களூர்-2; சென்னை நகரம்: ராஜேஸ்வரி பிலிம்ஸ், சென்னை; இலங்கை: சிலோன் என்டர்டெய்ன்மென்ட்ஸ் லிமிடெட், கொழும்பு; எம். எம். எஸ்: ஜியான் சிங் & கோ., லிமிடெட், சிங்கப்பூர்.

ஜனவரி
14 முதல்
N. Sabhapathi B.A.
NEWS AGENT,
20, BANADURAI KOSAVAN ST,
KUMBAKONAM.
வேலைக்காரி
மகள்
ராஜ்யம் பிக்சர்ஸ்
தயாரிப்பு........
தமிழ்
டைரக்ஷன் ரங்கநாததாஸ்
மேற்பார்வை · பிரஸாத்
சென்னை
வெலிங்டன்
பிராட்வே
மற்றும்
தமிழ்நாடெங்கும்
BELL
RELEASE

எமது நூல்கள்
எதிர்காலப்
படிக்கட்டுகள்

எல்லோருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

அறிவுப் பணி செய்து ஆனந்தம் காண்போம்!

அண்ணு தீட்டியவை

ரோமாபுரி ராணிகள்	2–4–0
கம்பரசம்	1–8–0
குமரிக்கோட்டம்	1–0–0
கற்பனைச் சித்திரம்	1–0–0
சிறு கதைகள்	1–0–0
பணத்தோட்டம்	1–0–0
வர்ணுஸ்ரமம்	0–12–0
நிலையும் நினைப்பும்	0–12–0
ஆறு கதைகள்	1–0–0
நாம்	1–0–0
கபோதிபுரக் காதல்	1–4–0

படித்து மகிழ்வீர்!

அரங்கண்ணல்
ரோம் 1–8–0
ரஸ்புடீன் 1–8–0
இதய கீதம் 0–12–0

வில்லாளன்
இருளும் ஒளியும் 1–8–0

மதியழகன்
நன்றி யாருக்கு 1–0–0
அறிவின் தூதர்கள் 0–12

விரைவில் வெளிவருபவை

மு கருணநிதி தீட்டிய
தெருக்கூத்து (கற்பனை ஓவியங்கள்)
நாடும் நாடகமும்
மந்திரி குமாரி (நாடகம்)
ஒரே முத்தம் (,,)
இரத்தக் கண்ணீர் (சரித ஓவியம்)
நாம் (திரை ஓவியம்)

அரங்கண்ணல் தரும்
புழுதி மேடு (சிந்தனை ஓவியங்கள்)

கே. எ. மதியழகன் தீட்டிய
புதுமைத் தாகம் (கட்டுரை)

தில்லை வில்லாளன் தரும்
கிழவனின் கனவு (நாடகம்)

ப. வாணன் தீட்டிய
ஏமாற்றம் (சிறு கதைகள்)

அறிவு விருந்துகள்

*

வாணன்
ரஷ்ய இலக்கியம் 1–8–0

மு. கருணநிதி
விடுதலைக் கிளர்ச்சி 1–0–0
பூந்தோட்டம் 0–3–0

சிற்றரசு
சாக்கிய சிம்மன் 1–0–0
கொலம்பஸ் 1–0–0

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம், திருச்சி.

வியாபாரிகள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

தோழர் சி. பி. சிற்றரசு

எழுதியவை

1. போர்வாள் ...1—0—0
2. எமிலிஜோலா (முதற்பாகம்)...1—0—0
3. எமிலிஜோலா (2-ம் பாகம்)...1—0—0
4. இரத்தத் தடாகம் ...1—0—0
5. சாய்ந்த கோபுரம் ...1—0—0
6. மதி (நாடகம்) ...1—0—0
7. தங்க விலங்கு (நாடகம்) ...1—0—0
8. விடுதலை வீரன் ...1—0—0
9. சுதந்திரத் தந்தை ரூசோ...1—0—0
10. மந்திர முட்டை ...1—0—0
11. விஷக் கோப்பை ...1—0—0
12. ஜோதிப் பெண் ...1—0—0
13. மார்டின் லூதர் ...0—10—0
14. வெங்கலச் சிலை ...0—8—0

தோழர் கி. மனேகரன்

எழுதியது

15. உரிமைக் குரல் ...0—10—0

தமிழ் மன்றம்

தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி